DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
-----
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, ATTUR.

| | | |
|---|---|---|
| Calendar | .. .. | **CC. 78/2020** |
| Miscellaneous | .. .. | |
| Preliminary Register | .. .. | |
| Sessions | .. .. | |
| Deposition of Witness for | | PW 11 |
| | | Prosecution |
| | | Court |

| | | | |
|---|---|---|---|
| Name | : **திரு.ஸ்டாலின்** | Caste | : |
| Father/Husband Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : 42 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

07.07.2022.

**சாட்சி முன்னிலை. உறுதிமொழி எடுக்கப்பட்டது. முதல் விசாரணை**

துவக்க நேரம் 03.51

1) நான் தென்னங்குடிபாளையத்தில் வசித்து வருகிறேன். ஆத்துார் பஸ்ஸ்டேண்டில் பூக்கடை வைத்து வியாபாரம் செய்து வருகிறேன். கடந்த 04.01.2020 அன்று தென்னங்குடிபாளையம் பைபாஸ் பாலம் அருகே உள்ள எனது அம்மாவை பார்க்க, காலையில் சென்றுவிட்டு, மறுநாள் காலை 7.15 மணிக்கு சேலம் - சென்னை செல்லும் பைபாஸ் ரோடு அருகில் டீக்கடையில் டீ குடிக்க சென்றிருந்தேன்.

2) அந்த இடத்தில் DSP இருந்தார். அவர் அந்த இடத்தை படம் வரைந்து, எழுதிக்கொண்டார். என்னை அந்த இடத்தில் நடந்த விபத்தை குறித்து விசாரித்தார். பின்பு என்னிடம் அவர் தயார் செய்து எழுதிய தாளில் என்னிடம் படித்துப்பார்க்கச்சொல்லி பின்பு அதில் கையெழுத்து போடச்சொன்னார். நானும் கையெழுத்து செய்தேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையதுதான். **(பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**.

3) மேலும் விபத்து நடந்த இடத்தில் உடைந்த உதிரி பாகமான வாகனத்தின் சிம்பல், பிளம்பர், உடைந்துபோன கண்ணாடி துாள்கள், சுமார் 30 இன்ச் ஆங்கில் ஒன்றும், (பின்னிட்டு சாட்சி 39 செ.மீ ஆங்கில் என்று கூறினார்) டேஞ்சர் லைட் ஒன்றும், மொத்தம் 4 உதிரிபாகங்களை கைப்பற்றியதை டைப் செய்து, ஒரு கான்ஸ்டபுளை வைத்து பிரிண்ட் அவுட் எடுத்துவரச்சொல்லி, என்னிடம் கையெழுத்து போடச்சொல்லி கேட்டார். என்னிடம்

காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையதுதான். **(கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**.

4) என்னிடம் காட்டப்படும் பைபரால் ஆன மகேந்திரா காரின் சிம்பலின் உடைந்த பாகம் என் முன்னிலையில் கைப்பற்றப்பட்டதுதான். **(மகேந்திரா காரின் சிம்பலின் உடைந்த பாகம் அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). என்னிடம் காட்டப்படும் சிறு துண்டுகளாக உடைந்த கண்ணாடி பாகங்கள் என் முன்னிலையில் கைப்பற்றப்பட்டதுதான். **(சிறு துண்டுகளாக உடைந்த கண்ணாடி பாகங்கள் அ.சா.பொ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). என்னிடம் காட்டப்படும் இரும்பால் ஆன சதுர ஆங்கில் சுமார் 40 செ.மீ நீளம் கொண்டது என் முன்னிலையில் கைப்பற்றப்பட்டதுதான். **(இரும்பால் ஆன சதுர ஆங்கில் சுமார் 40 செ.மீ நீளம் கொண்டது அ.சா.பொ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). என்னிடம் காட்டப்படும் டேஞ்சர் லைட்டின் துண்டுகள்-2 என் முன்னிலையில் கைப்பற்றப்பட்டதுதான். **(டேஞ்சர் லைட்டின் துண்டுகள்-2 அ.சா.பொ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). வழக்கு சம்மந்தமாக காவல் துறை கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

1) போலிசார் என்னை விசாரித்தார்கள். நான் எனது அம்மாவை பார்க்கச்சென்றதாகவும், டீ குடிக்க சென்றதாகவும் போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் போலிசார் விசாரணையில் இதை சொல்லவில்லை என்றாலும், தற்பொழுதுதான் நீதிமன்றத்தில் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல, போலிசாரிடம் சொல்லியுள்ளேன்.

2) நான் ஆத்துாரில்தான் குடியிருக்கிறேன் என்றால் சரிதான். நான் ஆத்துார் பேருந்து நிலையத்திற்கு செல்லும் முன்பாக வளைவில் நான் பூக்கடை வைத்துள்ளேன் என்றால் சரிதான். அந்த பூக்கடையை நான் 20 வருடமாக நடத்தி வருகிறேனா என்றால் 30 வருடமாக நடத்தி வருகிறேன்.

3) நான் அந்த இடத்தில் 30 வருடமாக பூக்கடை வைத்திருப்பதால் போலிசாருடன் எனக்கு அதிகமான பழக்கம் உள்ளது என்றால் நான் எந்த போலிசாரிடமும் பழக்கம் வைத்ததில்லை. பக்கத்து கடையில் பிரச்சனை என்றால் நான் காவல் நிலையம் செல்வேன் என்றால் சரிதான், கடையை மாற்றி வைக்கச்சொல்லும்பொழுதும், கடை வைப்பதில் பிரச்சனை ஏற்பட்டாலும் காவல் நிலையம் போவேன்.

4) நான் முதல் விசாரணையில் சா.பொ.1 குறித்து, வாகனத்தின் எம்பலம் மட்டும் கைப்பற்றியதாக சொல்லியுள்ளேன் என்றாலும், சா.பொ -ஐ காட்டியபிறகு எம்பலத்துடன் கூடிய சான்றுப்பொருளை கைப்பற்றியதாகவும் முரண்பட்டு சொல்கிறேன் என்றால்

சொல்லும்பொழுது தனித்தனியாக சொல்லமுடியாது.

5) என்னிடம் காட்டப்படும் பொருள் கண்ணாடி துகள்கள் இல்லை என்றாலும், கண்ணாடி துகள்கள் வேறு மாதிரி இருக்கும் என்றாலும் சரியல்ல. இது கண்ணாடித்துகள்கள்தான். என் முன்னிலையில் எந்த ஆவணமும் கைப்பற்றவில்லை என்றாலும், நான் காவல் நிலையத்தில் கையெழுத்து போட்டேன் என்றாலும் சரியல்ல, என் முன்னிலையில்தான் கைப்பற்றினார்கள்.

6) நான் கையெழுத்து செய்த பேப்பரில் உள்ள விவரத்தை நான் படித்துப்பார்த்து கையெழுத்து செய்யவில்லை என்றால் இல்லை, நான் படித்துப்பார்த்துதான் கையெழுத்து போட்டேன். அதில் என்ன விவரம் எழுதியிருந்தது என்றால் 2 வருடமாகிவிட்டதால் அதில் என்ன எழுதியிருந்தது என்று தற்பொழுது நினைவில்லை.

7) சம்பவ இடத்தில் விபத்திற்குள்ளான வாகனத்தை குறித்தாரா என்றால் தெரியவில்லை. சம்பவ இடத்தில் நான் வாகனத்தை பார்க்கவில்லை என்றால் சரியல்ல, மகேந்திரா வாகனமும், ஈச்சர் வாகனமும் கவிழ்ந்து கிடந்தது. மீண்டும் ஒரு கையெழுத்தை நான் சம்பவ இடத்தில் போட்டேனா, காவல் நிலையத்தில் போட்டேனா என்றால் சம்பவ இடத்தில்தான் போட்டேன்.

8) நான் சம்பவ இடத்தில் கையெழுத்திட்ட கைப்பற்றுதல் மகஜர் கணிணியால் தட்டச்சு செய்யப்பட்டது என்றால் சரிதான், அங்கு லேப்டாப்பில்தான் டைப்செய்துக்கொண்டிருந்தார்கள். நான் சென்று 15 நிமிடத்தில் எல்லா வேலையும் முடிந்துவிட்டது என்றால் இல்லை, 7.30 மணிக்கு சென்றேன், 8.30 மணிக்குதான் முடிந்தது.

9) விபத்து நடந்த இடத்தில் நிறைய வீடுகளும், காடுகளும் உள்ளது என்றால் சரிதான். நான் சம்பவ இடம் செல்லவில்லை என்றாலும், சம்பவ இடத்தில் என் முன்னிலையில் எந்த ஆவணமும் தயார் செய்யவில்லை என்றாலும், எந்த சா.பொருளும் கைப்பற்றவில்லை என்றாலும், ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் தயார் செய்யப்பட்டு, காவல் நிலையத்தில் வைத்து நான் கையெழுத்து செய்தேன் என்றாலும், போலிசார் கேட்டுக்கொண்டதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் காவல் நிலையம் அடிக்கடி செல்வதால் போலிசாருக்கு சாதகமாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** - இல்லை

முடிவு நேரம் 04.28

ஒம்/-S.முனுசாமி,<br>
நீதித்துறை நடுவர் எண்.1,<br>
ஆத்தூர்.